பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 06 செவ்வாய்க்கிழமை 20.06.2023 கதிர் 221

## ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்கு

# இந்தியா இல்லாமல் தீர்வும் கிடைக்காது

### முன்னாள் எம்பி. சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

**அதனால்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் புதுடில்லியை நாடி நிற்பதாகவும் விளக்கம்**

**இந்தியா இல்லாமல் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது என்பதாலேயே தமிழ்த் தேசி யக் கட்சிகள் இந்தியாவை நாடி நிற்கின்றன என்று தெரிவித்தார் ஈபிஆர்எல்எவ் அமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.**

**ஈபிஆர்எல்எவ் அமைப் பின் தலைவர் பத்மநாபாவின் 33ஆவது நினைவுதினம் நேற்று வவுனியாவில் இடம் பெற்றது.** ☞2



## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருப்பதை இன்று வாசகர்களுக்கு அப்படியே தருகின்றேன்.

''இலங்கை அரசமைப்பில் இருந்து 13ஆவது திருத்தம் அகற்றப்படவேண்டும்' என வடக்கின் கட்சித் தலைவர் ஒருவர் என்னிடம் நேரடியாகச் சொன்னார்.

என்னப்பா இதைத்தானே சிங்கள இனவாத பிக்குகளும் கூறுகிறார்கள் என எனக்கு சின்னதா ஒரு அதிர்ச்சி. இதை நான் கேட்டேன்.

"இல்லை, அண்ணை, அப்போதுதான், தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஐக்கியம் வரும்" என்றார் அவர். தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையடைவது நல்லதுதானே. ☞2

## நடுக்கடலில் தனித்து நின்ற இந்தியப் படகு



ந.லோகதயாளன்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் ஆள்கள் எவரும் இன்றி நின்ற இந்தியப் படகைக் கைப்பற்றிய கடற்படையினர் அதனை நெடுந்தீவிற்கு எடுத்து வந்துள்ளனர்.

இலங்கை எல்லைப்பரப்பில் கச்சதீவு அருகே நின்ற இந்திய நாட்டுப் படகே கடற்படையினரால் மீட்டு வரப்பட்டுள்ளது.

தமிழகம் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த இந்தப் படகு சனிக்கிழமை ☞2

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு குறித்து தவறான தகவலே பரப்பப்படுகின்றது

### பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

உள்நாட்டு கடனை மறுசீரமைக்கும் வேலைத் திட்டம் தொடர்பில் நாட்டில் பல்வேறு தரப்பினர் தவறான தகவல்களை பரப்பிவருகின்ற போதிலும் அது தொடர்பில் அரசாங்கம் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என்று பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரு வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையம் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவுக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் ஆட்சி எப்போதும் பொறுப்புடன் செயல்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் நாடாளுமன்றத்தில் உள்நாட்டு ☞2

## கோட்டாவுக்கு ஏற்பட்ட நிலை ரணிலுக்கும் வர விடமாட்டோம்

### மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி. தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவிற்கு ஏற்பட்ட நிலைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற்படுவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உறுதியளிப்பதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியவில் நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியபோது, அதனை மீட்பதற்கான சவாலை ஏற்றுக் கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். ஆனால், அதற்கான தைரியம் அவருக்கு இல்லை.

அதனால் அவர் ☞2

## 'றோ'விற்கு புதிய தலைவர்

இந்திய உளவு அமைப்பான 'றோ'வின் அடுத்த தலைவராக ரவி சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

'றோ'வின் தற்போதைய தலைவரான சமந்த் கோயலின் பதவிக்காலம் இம்மாதம் 30ஆம் திகதியோடு நிறைவடைகின்ற நிலையில் அடுத்த தலைவரை தெரிவு செய்வதற்கான அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுள்ளபோது அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, எதிர்வரும் ஜூலை ☞2

## மருத்துவரின் வீடு மீது நேற்றிரவு தாக்குதல்

### பெற்றோல் குண்டு வீச்சு

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் உள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டின் மீது நேற்று இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கந்தர்மடம் மணல்தறை வீதியில் வசிக்கும் மருத்துவர் ஒருவரின் இல்லத்திற்குள் நேற்று இரவு 10.15 மணியளவில் நுழைந்த நால்வரே இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் வெளி வாசலை உடைத்து உட்புகுந்ததோடு வீட்டின் யன்னல், கதவுகள் மீது பெற்றோல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொரிசாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிசார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## மொட்டு வாடி விட்டது என நினைத்து எதிர்க் கட்சிகள் தவறிழைத்துவிட்டன

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

பொதுஜன பெரமுனவே மீண்டும் ஆட்சி அமைக்கும். கடந்த காலங்களில் நாங்கள் கொஞ்சம் அமைதியாக இருந்தோம். மொட்டு வாடி விட்டது என எதிர்க்கட்சிகள் நினைத்தன. அந்த இடத்தில் அவர்கள் தவறிழைத்து விட்டனர்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.

உடுகம்பள ரெஜி ரணதுங்க மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட குழுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சியினர் தேர்தலை நடத்துமாறு கோரி கோஷமிடுகின்றன. தேர்தலை நடத்தவில்லை என்றால், கொழும்பை முற்றுகையிட போவதாகக் கூறினர். எனினும் கொழும்பை முற்றுகையிட ☞2

## 8 மாதங்களில் 6 மாணவர்கள் பேராதனையில் தற்கொலை

கடந்த எட்டு மாதங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று அறிக்கையிட்டுள்ளது.

இதுதொடர்பில் கண்டி தேசிய வைத்தியசாலையின் முன்னாள் மனநல வைத்தியர் வை.டபள்யூ.ஏ.எல். விக்ரமசிங்க தெரிவித்ததாவது: ,

பொதுவாக பெரும்பான்மையான பல்கலைக் கழக மாணவர்களின் அனுபவம் குறைந்துள்ளதுடன், சகிப்புத்தன்மையும் குறைவடைந்துள்ளது.

பாடசாலை நாட்களிலிருந்தே குழந்தைகளின் திறன்களை பெற்றோர் கண்டறிந்து இலகுவான மன நிலையுடன் பாடத்திட்டம் மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்கு அவர்களை வழிநடத்த வேண்டும்.

விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வெற்றி, தோல்விகளை ஒரே விதத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் செயற்பட இடமளிக்க வேண்டும்.

மேலும், பல் ☞2

## நாடாளுமன்றம் ஊடாக நிதியை தேர்தலுக்கு பெற்றுத் தாருங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் பகிரங்க கோரிக்கை

தற்போது நாடு வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் தேர்தல் ஒன்றுக்கான தேவை எழுந்துள்ளதால் நாடாளுமன்றத்தின் ஊடாக அதற்கான நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக் காலமாக இடம்பெற்ற சம்பவங்களின் பின்னர் மக்கள் ☞10

## வரலாற்றுப் புகழ்மிக்க


## நாகபூசணி அம்மனுக்கு நேற்றுக் கொடியேற்றம்

### வருடாந்தப் பெருவிழா தொடங்கியது

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை இடம்பெற்று கொடியேற்ற உற்சவம் தொடங்கியது. பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா குரல் வானுயர அம்மனின் கொடி ஏறியது.

அதனை தொடர்ந்து நாகபூசணி அம்பாள் பிள்ளையார் மற்றும்



முருகபெருமான் சகிதம் வலம்வந்து வந்து ☞2

## வலி. வடக்கில் இதுவரையும்

## விடுவிக்கப்பட்ட காணிகளை அளவிடும் பணி தொடக்கம்



யாழ்ப்பாணம் - வலி வடக்கில் இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளை அளவிடும் பணி நேற்று மயிலிட்டி பேச்சி அம்மன் ஆலயத்தில் தொடங்கியது.

போர்க் காலத்தில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்த வலி. வடக்குப் பகுதிக் காணிகளில் 6,300 ஏக்கரை போருக்குப் பின்னர் சுவீகரித்து அரசுடமையாக்குவதாக 2013ஆம் ஆண்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது. எனினும் மக்கள் போராட்டம் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் அழுத்தம் காரணமாக அதில் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதிக் காணி உரிமையாளர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

இராணுவத்தின் பிடியிலிருந்து காணி விடுவிக்கப்பட்டபோதும் அவற்றை அரசுடமையாக்குவதற்காக வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி திரும்பப்பெறப்பட ☞2

## இந்தியக் கடன் மூலம் பெறப்பட்ட 2 மருந்துகளின் தரத்தில் சந்தேகம்

### பரிசீலிக்க சுகாதார அமைச்சு தீர்மானம்

இரண்டு வகையான மருந்துப் பொருட்களின் தரம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

குறித்த மருந்துகளை உட்கொண்டதன் பின்னர் நோயாளர்கள் உயிரிழக்கின்றமை மற்றும் பல்வேறு விதமான பக்கவிளைவுகளை எதிர்கொள்கின்றமை தொடர்பில் ஆராய்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள குறித்த இரு வகையான மருந்துகளும் இந்திய கடனுதவியின் ☞10

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

அதற்கான இவர்களது 'லொஜிக்' இது.

பதின்மூன்று மாகாண சபையா, பதின்மூன்றுப்ளஸ் மாகாண சபையா, இந்திய மாநிலஆட்சிமொடலா, சமஷ்டியா, கூட்டரசா, ஐம்பதுக்கு ஐம்பதாஅல்லதுகடைசியாக ரணிலின் இடைக்கால ஆலோசனை சபையா, தமக்கு என்ன தீர்வு தேவை என்பதைச் சகோதர ஈழத் தமிழ் தேசிய இனம் தீர்மானிக்கட்டும். அதுதான் உள்ளக சுயநிர்ணய உரிமை.

பதின்மூன்றைக் கொண்டுவந்த பாரத நாடே, அங்குள்ள இந்திய மாநில ஆட்சி அதிகாரங்களுக்கு சமமாகக்கூட, மாகாணசபையைஏற்பாடுசெய்யவில்லை என்றுகூடநான்பகிரங்கமாக அன்று என் உரையில் கூறினேன். நான் எவரையும் பதின்மூன்றை ஏற்றுக் கொள்ளுங்கள்எனக்கூறவே இல்லை.

பதின்மூன்று அகற்றப்பட்டு, வடக்கு, கிழக்கு மாகாண சபைகளை அவர்கள் நிராகரித்தால், அது அவர்களது கட்சி முடிவு. அக்கட்சியின் முடிவு அப்படி என்றால்,அதுஅவர்களதுஉரிமை நிலைப்பாடு. அதற்கு நான்என்னசெய்யமுடியும்? அதேபோல், சின்னதா அதிர்ச்சியடைய எனக்கும் உரிமைஇருக்கிறதல்லவா?

ஏனெனில் பதின்மூன்றாம் திருத்தம் அகற்றப்பட்டால், மாகாணசபைகளே போய் விடும். முதலில் மாகாண சபைகளைப் பெற்று அடுத்த கட்டம் நோக்கி நகர்வோம் என எண்ணும்ஏனையோருக்கு இதில் உடன்பாடா எனத் தெரியவில்லை.

மேலும்மாகாணசபை வடக்கில், கிழக்கில் மட்டும் இல்லை. நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களுக்கும் இருக்கின்றன. இந்தப் பாழாய்ப்போன பதின்மூன்றை அகற்றி விட்டு, இவர்கள் சமஷ்டியைக் கொண்டுவந்தால்எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால், சமஷ்டி வரும் வரை நாடு காப்பாற்றப்பட வேண்டும்.

நானறிய கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் முதல் அமைச்சர் டக்ளஸ் வரை கூட எவரும் பதின்மூன்றை முழுமையான இறுதித் தீர்வாக ஏற்கவில்லைஎன்றுநான்நினைக்கின்றேன். அது இடைக்கால தீர்வுதான். இரா. சம்பந்தன் பலமுறை இது பற்றி தெளிவாகக் கூறி விட்டாரே - என்றுள்ளது.

தன்னிடம் இப்படிப் 13ஐ அகற்றினால் தமிழ்க் கட்சிகள்ஐக்கியப்படும்என்று பேசிய தம்பி யார் என்பதை மனோ கணேசன் பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. ஆனால், தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்கு இப்படியொரு காரணத்தைக் கண்டுபிடித்த அந்தத் தம்பியை முதலில் கண்டுபிடிக்கவேண்டும். தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாகிவிட்டால் மட்டும் கொழும்பு ஆட்சியாளர்கள் தாம்பாளத்தில் வைத்து சமஷ்டியைக் கொடுத்து விடுவார்களாக்கும். கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம்போனான்என்ற கதையாக, கொழும்பைக் கொண்டு13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தவைக்க முடியாதவர்கள் அதே கொழும்பைக் கொண்டு சமஷ்டி பெற்றுத் தருவார்கள் என்பதை நாங்கள் எல்லோரும் நம்பிவிட்டுத்தான் மறு கதை பேச வேண்டும் போல....

**இடிமின்னல்**

(கருத்து மற்றும் தகவல்களுக்கு idiminnal23@gmail.com)

## இந்தியா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகர மத்தியில் உள்ள அவரது சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் ஈபிஆர்எல்எப் வவுனியா அலுவலகத்தில் அஞ்சலிநிகழ்வுஇடம்பெற்றது. அங்குஉரையாற்றியபோதே சிவசக்திஆனந்தன்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்து 14 ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை.போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் ஏனைய பிரச்சினைகளைக் கூடத்தீர்க்கமுடியாதநிலையே இருக்கின்றது. இதனால்

தீர்வுக்காக இந்தியாவை நாடும் நிலையே இருக்கின்றது; ஒருசிலகட்சிகைளத் தவிர ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்வுக்காக இந்தியாவையேநாடிநிற்கின்றன. இந்தியா இல்லாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதாலேயே தமிழ்க் கட்சிகள் அப்படி நாடியிருக்கின்றன.

ஈழத்தமிழர்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியப் பிரதமர் இலங்கை ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றே இந்தத் தமிழ்க்கட்சிகள் எதிர்பார்க்கின்றன.இது தொடர்பில் ஜனநாயகத் தமிழ் தேசியக்கூட்டணியின்நிர்வாகம் கூடியபோதும் முக்கியமாகஒருதீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

ஜூன் 21 இலங்கை ஜனாதிபதி இந்தியப் பிரதமரைச் சந்திக்க உள்ளார். இந்தச்சந்திப்பின்போது ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று இந்தியப் பிரதமர் வலியுறுத்தவேண்டும்,

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படிஉருவாக்கப்பட்ட அரசமைப்பின்13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைக்குள்ள முழுமையான அதிகாரங்களையும் வழங்க அழுத்தம் கொடுக்கப்படவேண்டும், போரினால்ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளான நில ஆக்கிரமிப்பு, பௌத்தமயமாக்கல் போன்றவற்றிலிருந்துஈழத்தமிழர்களைப் பாதுகாக்க இந்திய பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி

பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதுவது என்றும் அந்தக் கடிதத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் அனைத்துக் கட்சிகளின் கையெழுத்தையும் பெற்றுக் கொள்வதுஎன்றும்தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

(100)

## நடுக்கடலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட நிலையில் பழுது காரணமாகபடகைகைவிட்டு அதிலிருந்தவர்கள்பிறிதொரு படகில் கரை திரும்பினர் என்றுபடகின்உரிமையாளர் இராமேஸ்வரம்பொலிசாரிடம் நேற்றுமாலைதகவல்தெரிவித்துள்ளார்.

இருந்துபோதும் இந்தப் படகு இலங்கை கடற்பரப்பில் நின்றமைதொடர்பில்சரியான பதில் கிடைக்காதமையினால் இருநாடுகளிலும்விசாரணை தொடர்கின்றது.


வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரில் இருக்கும்
எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான
வேலைவாய்ப்பு

• Show Room Manager – 4 வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் - 3 பேர்
கிளிநொச்சி - 1 பேர்

• Service Centre Assistant – 3 வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் - 1 பேர்
கிளிநொச்சி - 1 பேர்
மன்னார் - 1 பேர்

• Accountant (வணிகத்துறையில் Degree / Diploma) - 2 வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் - 2 பேர்

• Camera Technicians - 3 வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் - 2 பேர்
மன்னார் - 1 பேர்

கணினிசார் அறிவு மற்றும் குறித்த துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (with Driving Licence)

தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

மேலும் EPF, ETF வழங்கப்படும்.
தங்களது தகுதிக் கேற்ற வேதனம் வழங்கப்படும்.
தங்களது விண்ணப்பங்களை 26.06.2023 இற்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தபால் மூலம்
194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

NALIN Information Technologies(Pvt)Ltd
Computers of the North

Email – info@nit.lk
Contact No - 021 222 1121
077 542 7426


## ‘றோ’விற்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் முதலாம் திகதி 'றோ'வின் புதிய தலைவராகரவிசின்ஹாபதவியேற்கவுள்ளார். கடந்த 1988ஆம் ஆண்டு சத்தீஸ்கர் கேடர் ஐ.பி.எஸ்.அதிகாரியான ரவி சின்ஹா, தற்போது அமைச்சரவை செயலகத்தின் சிறப்புச்செயலராக கடமையாற்றி வருகின்றார்.

இந்தியறோஅமைப்பின் தலைமைப்பதவியைஏற்கும் ஒருவர் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குஅல்லதுமறு அறிவித்தல்வரும்வரையில் கடமையில்செயற்படமுடியும்.

## 8 மாதங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலைக்கழகங்களைபொறுத்த வரையில் பெரும்பான்மையான மாணவர்களிடையேதனியாகசெயற்பட இயலாமைஅழுத்தம்,பரீட்சை குறித்தபயம்போன்றவற்றால் மனஅழுத்தம்ஏற்பட்டுள்ளது. குழந்தைகளின் மனநிலை தொடர்பில்சிறுவயதிலிருந்தே அவதானத்தை செலுத்த வேண்டியது அவசியமாகும் - என்றார்.

## விடுவிக்கப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. எனவே விடுவிக்கப்பட்ட காணிகளை அளந்து அவற்றை மற்றொரு அரச வர்த்தமானி அறிவித்தல் மூலமாக அரசுடைமையாக்குதலில் இருந்தும் விடுவிப்பது என்று அண்மையில் தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் விடுவிக்கப்பட்ட காணிகளை அளவிடுவதற்கான பணி நேற்றுத் தொடங்கப்பட்டது. மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் அளவீட்டுப் பணி தொடங்கியது.

அங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது:

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,போர் காரணமாக இராணுவத் தேவைகளுக்காக அரசினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்து காணி உரிமையாளர்க ளிடம் கையளிப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

2013 ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக அரசுடமையாக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் அடிப்படையில் அரசகாணிகளிகளாகசுவிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட சுமார் 6300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணிஉரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக இப்போதும் அரச காணிகளாகவே காணப்படுகின்றமையினால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானியை வெளியிட வேண்டியிருக்கின்றது.

இதுதொடர்பாக, அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாக கலந்துரையாடிய நிலையில், குறித்த 2013 வர்த்தமானியை மீளப் பெறுவதற்கும், தற்போதும் விடுவிக்கப்படாமல் இருக்கின்ற சுமார் 2,900 ஏக்கர் காணிகளில் முடிந்தளவு காணிகளை விடுவிப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.- என்றார்..

இரண்டு மாதங்களில் இந்த அளவீட்டுப் பணிகள் நிறைவுக்கு வரும் எனத் தெரிவித்தார் யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரம்.

காணி அளவீட்டுத் தொடக்கநிகழ்விலல்ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன், யாழ்மாவட்ட செயலக மேலதிகச் செயலாளர் (காணி) முரளிதரன், நில அளவைத் திணைக்கள மாகாண பணிப்பாளர், தெல்லிப்பழை பிரதேச செயலர், நில அளவை திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# ரணிலுக்கு லண்டனில் எதிர்ப்பு



உத்தியோகபூர்வ பயணமாக லண்டன் சென்றுள்ளஜனாதிபதிரணில் விக்கிர மசிங்கவுக்கு அங்கு ஈழத் தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த வலியுறுத்தியும் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்ட வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன

## கோட்டா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள;வேறுகாரணங்களைக் கூறிக்கொண்டிருந்தார். அத்தகையதொரு இக்கட்டான நேரத்தில்முன்வந்துசவாலை ஏற்றுக்கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

அவர் பதவியை ஏற்றுக் கொண்டுஅனைவரும்சுதந்திரமாகவாழக்கூடியசூழலை மீண்டும் உருவாக்கினார்.

தற்போது அவர் பொருளாதார மீட்சியை நோக்கி நகர்கின்றார்.அந்தஅபிவிருத்தி வேலைத்திட்டத்தைமுன்னெடுத்துச்செல்வதற்குஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியாகிய நாங்கள் எமது உதவிகளை வழங்குவோம்.

கோட்டாபய ராஜபக்சவுக்கு நிகழ்ந்ததை ரணில் விக்கிரமசிங்கவுக்கு நடக்க அனுமதிக்க மாட்டோம் இது அரசியல் பிரச்சினை அல்ல. இது மக்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை. தேர்தல்நேரத்தில் அரசியல் செய்யலாம். தற்போது வேறுபட்ட அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்துவதால் பயனில்லை - என்றார்

## நாகபூசணி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

இவ் கொடியேற்ற திருவிழாவில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும்பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சியாக பதினாறு தினங்கள் இடம்பெறவுள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் 2023ஆம் ஆண்டுக்கான திருவிழா ஜூலை 1 சப்பரத் திருவிழாவும் ஜூலை 2 தேர்த்திருவிழாவும் ஜூலை 3 தீர்த்தோற்சவமும் ஜூலை 4 தெப்போற்சவமும் இடம் பெறவுள்ளன.

## மொட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய கூட்டம் வரவில்லை என்பதைதொலைக்காட்சியில் காண முடிந்தது. இவர்கள் வேடிக்கைகளை காண்பிப்பதற்காகவே இதனைத் செய்கின்றனர்.

சிகப்பு சகோதரர்களே அதிகமாக கோஷமிடுகின்றனர்.ஜே.வி.பியின் வரலாற்றை எடுத்துக்கொண்டால், அவர்கள் தேர்தல்களை புறக்கணித்தனர். நாடாளுமன்றத்தில்ஜனாதிபதியை தெரிவுசெய்யும்வாக்கெடுப்பில் போட்டியிட போவதாக கூறிய சஜித் பிரேமதாச இறுதியில் ஒதுங்கிக்கொண்டார்.

இந்தஇரண்டுகட்சிகளும் அரசியல் யதார்த்தம் புரியவில்லை. மக்கள் கூட்டத்தை பார்த்ததும் உற்சாகமடைகின்றனர்.ஊடகங்களுக்கு முன்னாள் அரசியல் நாடகம் ஆடுகின்றனர்.

இந்த ஆட்சி தற்போதே பொருளாதார நெருக்கடியை தீர்க்க ஆரம்பித்துள்ளது. இந்த நேரத்தில் தேர்தலுக்கு சென்றால், பிரச்சினை உக்கிரமடையும். இந்த உண்மையை புரிந்துக் கொள்ளாதவர்கள் நாட்டின் ஆட்சிஅதிகாரத்தைகைப்பற்றி நாட்டைமுன்னேற்றுவார்கள் என்று நம்ப முடியுமா?. வேறு நாடுகளில் எனில் நெருக்கடியை தீர்க்க எதிர்க்கட்சிகள் ஆட்சியாளர்களுக்கு உதவும்.

எமது நாட்டில் எதிர்க் கட்சிகள் மக்களின் மனங்களில்பொய்களைவிதைத்து எமது ஆட்சியின் பயணத்திற்கு தடையேற்படுத்துகின்றன. ஜனாதிபதி பெருத்தமான நேரத்தில், நாட்டுக்கு உகந்ததேர்தலைநடத்துவார். அப்போதும்நாம்அனைவரும் இணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம். அரசியல் செய்யும்நேரத்தில்அரசியல் செய்வோம்.

நாங்கள்மிகவும்கஷ்டப்பட்டு உழைத்து பொது ஜன பெரமுனவை உருவாக்கினோம். சவால்களுக்கு பயந்து நாங்கள் தப்பியோட மாட்டோம். எங்கள்வீடுகளை தீயிட்டனர். எப்படியான கஷ்டங்கள் வந்த போதிலும் எமது கட்சியினர் கட்சியுடன் இருக்கின்றனர்.

பொதுஜனபெரமுனவே மீண்டும்ஆட்சிஅமைக்கும். கடந்த காலங்களில்நாங்கள் கொஞ்சம் அமைதியாக இருந்தோம். மொட்டு வாடிவிட்டது என எதிர்க்கட்சிகள் நினைத்தன. அந்த இடத்தில் அவர்கள் தவறிழைத்து விட்டனர்.

கடந்த காலங்களில் கட்சி என்ற வகையில் எமது தவறுகள், குறைகள் குறித்து சுய விமர்சனம் செய்துக்கொண்டோம். திறமையான மாலுமிகள் உருவாவது புயல் வீசும் கடலிலேயே அன்றி அமைதியாக இருக்கும் கடலில் அல்ல. பொதுஜனபெரமுனதற்போது முன்னரை விட மிகவும் பலமாக உள்ளது - என்றார்.

## உள்நாட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன்மறுசீரமைப்புதொடர்பில் கருத்து வெளியிட்டார்.

மத்திய வங்கியும் நிதி அமைச்சும் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளன. குறிப்பாக நம் நாட்டின் வங்கிக்கட்டமைப்பு, நிதிக்கட்டமைப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாத மற்றும் ஸ்திரத் தன்மையை பராமரிக்க அவசியமான மறுசீரமைப்பிற்கு உகந்த தீர்வுகளை அனைவரும்தேடுகின்றனர். இது தொடர்பாக, நாடு முழுவதும் பல்வேறு தகவல்கள் மற்றும் அறிவிப்புகள் வெளியாகி வருகின்றன.

இது குறித்து எமது ஆட்சி இறுதித் தீர்மானம் எடுத்தவுடன், நாடாளுமன்றத்துக்கும்பொதுமக்களுக்கும் அறிவிக்கத்தயாராகஉள்ளது. இது மிகவும் உணர்வுபூர்வமான விடயம். இது சந்தை நிலைமையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, இந்த மறுசீரமைப்பு தொடர்பாக சந்தேகங்களை எழுப்பும் அறிக்கைகளை வெளியிடாமல் இருந்தால் தான், நமது நிதிச்சந்தையின் ஸ்திரத்தன்மையை நாம் தொடர்ந்துபராமரிக்கமுடியும்.

அதற்கு நாம் அனைவரும் மிகவும் பொறுப்புடன் செயற்படுவதுமுக்கியம். இந்த விடயங்கள் அனைத்தையும் பற்றி,ஜனாதிபதியின்பிரான்ஸ் விஜயத்தின் பின்னர் குறிப்பாக வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சிறந்த புரிதல் ஏற்படும்.

எமது ஆட்சியினால் முன்னெடுக்கப்படும்தற்போதையபொருளாதாரவேலைத் திட்டம் தொடர்பில் அரசியல் மேடைகளில் சில விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. ஆனால் விமர்சிக்கும் குழுக்களுக்கு ஒரு வேலைத்திட்டமோ தேவையோ அல்லது திறனோ இருந்தால், அந்த சவாலை எதிர்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. அந்த சவாலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மட்டுமே ஏற்றுக்கொண்டார்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற நாள்முதல்நாடுஅடைந்துள்ள முன்னேற்றங்களை மக்களுக்குஅறிவித்துள்ளார். பொறுப்பை ஏற்ற தலைவர் நாட்டுமக்களின்தேவைகளை நிறைவேற்றி வரும் இந்த தருணத்தில் பொறுப்பை ஏற்காதவர்கள் பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

குறிப்பாக ஜே.வி.பியின் மேடைகளில் இந்த பொருளாதாரத்தை கையாள்வது குறித்துபல்வேறுகருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் அந்த அறிக்கைகள் எதிலும் நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய எந்த யோசனையும் இல்லை. நாட்டை கட்டியெழுப்புவதற்கானஎந்தவொருவேலைத் திட்டத்தையும் அவர்கள் இதுவரை முன்வைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு இல்லாமல் ஒரு தீர்வை எட்டுவதே அவர்களின் நோக்கம். சர்வதேச நாணய நிதியத்தின்தலையீடற்றதீர்வு என்ன? சர்வதேச நாணய நிதியத்தின்ஆதரவின்றிஇந்த நாட்டில்நிலவும்பொருளாதார நெருக்கடிக்கு எந்தநாடுதீர்வு வழங்கும்?

சர்வதேசநாணயநிதியத்தின் ஆதரவின்றி தீர்வை வழங்குவதாக யாராவது கூறினால்அவர்களிடம்தீர்வு இல்லைஎன்றுதான்அர்த்தம். இன்று நாம் கடினமான ஒரு காலத்தை கடந்துவிட்டோம். இந்தகடினமானகாலம்படிப்படியாக முடிவுக்கு வரும் நிலைக்கு இன்று வந்துள்ளோம்.எதிர்மறை 7.8 ஆக இருந்தபொருளாதாரவளர்ச்சி விகிதம் இந்த ஆண்டின் இறுதியில் எதிர்மறை 3 ஆக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது. ஆனால், எமது ஆட்சி முன்னெடுத்து வரும்

தொடர்ச்சி 10ம் பக்கம்

காலைக்கதிர் Kalaikkathir

# மல்லாவியில் சடலமாகக் கிடந்தவர் அடித்தே கொலை செய்யப்பட்டார்

## உடற்கூறாய்வு அறிக்கையில் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மல்லாவி - பாலிநகர் - மூன்று வாய்க்கால்வயல்பகுதியிலிருந்துசடலமாகமீட்கப்பட்ட நபர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூன்றுவாய்க்கால் வயல் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் வட்டக்கச்சியைச் சேர்ந்த இளையதம்பி ராஜ்மோகன் (வயது 49) என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த நபர், துணுக்காய் விநாயகபுரம் பகுதியில் வசித்து வந்த நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த போது காணாமல்போயிருந்தார் எனவும், இவர் ஏற்கனவே கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நோய் ஒன்றுக்கு சிகிச்சை பெற்று வந்தார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

இதையடுத்து குறித்த சடலம், பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரியால் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் தலையில் அடிகாயங்கள் காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'சினிமாப் பாணியில் துப்பாக்கியைக் கடித்து உண்டிருக்கலாம்': இராணுவம் அச்சுறுத்திய சம்பவம் குறித்து அமைச்சர் டக்ளஸ்

இரணைமடு குளத்தில் வாயில் துப்பாக்கி வைத்து இராணுவம் அச்சுறுத்துவதை சினிமா பாணியில் துப்பாக்கியைக்கடித்துஉண்டிருக்கலாம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தில் இழுவைமீன்பிடிமுறையைகட்டுப்படுத்தி சட்ட ரீதியான மீன்பிடி முறைக்கு மட்டும் அனுமதி வழங்கல் தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவமும் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் கட்டுப்படுத்த முற்பட்ட மீனவர்களை மேல் வெடி வைத்தும், வாயில் துப்பாக்கியை வைத்தும் அச்சுறுத்தியதாக மீனவர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தை இன்றுதான் அறிய முடிவதாகவும், இந்த விடயம் தொடர்பில் படையினருக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறும், அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இந்த விடயம் பேசப்பட வேண்டும் எனவும் அரசாங்க அதிபரிடம் அமைச்சர் பணித்தார்.

துப்பாக்கியை வாயில் வைத்து அச்சுறுத்தியபோது சினிமாவில் நடப்பது போன்று துப்பாக்கியை சொக்கிலைட் உண்பதுபோல்கடித்துஉண்டிருக்கலாம் என அமைச்சர் நகைச்சுவையாக தெரிவித்தார். குறித்த விடயம்தொடர்பில் நீண்டநேரம் ஆராயப்பட்டதுடன், தடை செய்யப்பட்ட தொழில் முறையை நடைமுறைப்படுத்தக் கூடாது எனவும், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் ஆலோசித்தே செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (05)

## போட் சிட்டி அபிவிருத்தித் திட்டத்தில் கொள்ளையடிக்கப்படவில்லையாம்

### நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்



போட் சிட்டி அபிவிருத்தித் திட்டத்தை இடை நடுவில் நிறுத்தி, ராஜபக்ஷவினரே கொள்ளையடித்தனர் எனச் சிலர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதேஅவர்இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

போட் சிட்டி அபிவிருத்தித்திட்டத்தை இடைநடுவில் நிறுத்தி, ராஜபக்ஷவினர் கொள்ளையடித்தனர் எனக் கூறினார்கள்.

அதுதொடர்பாக தேடிப் பார்த்த பின்னர், ராஜபக்ஷக்கள்கொள்ளையடிக்கவில்லை என்று கூறி, மீண்டும் போர் சிட்டி திட்டத்தை ஆரம்பித்தார்கள்.

இன்று ராஜபக்ஷக்களால் செய்யப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களால் நாட்டுக்கு நஷ்டம் என்று கூறுகிறார்கள்.

உண்மை தான். விமானங்கள்வந்திறங்கும் விமான நிலையத்தை, நெற் களஞ்சிய சாலையாக மாற்றினால் நஷ்டம் ஏற்படத்தானே செய்யும்?

இதுதான் எமது நாட்டின் அரசியல்கலாசாரம்எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

## உலக வங்கி அடுத்த வாரம் இலங்கைக்கு 70 கோடி டொலர்களை வழங்கும்




எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள நிர்வாகக் கூட்டத்தில் இலங்கைக்கான வரவு செலவுத் திட்ட மற்றும் நலன்புரி ஆதரவாக 70 கோடி டொலர்களை உலக வங்கி அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துக்குப்பிறகுநெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்குக் கிடைக்கும் மிகப்பெரிய நிதி இதுவென ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிதியில், 50 கோடி டொலர்கள் பட்ஜெட் ஆதரவிற்காகவும் 25 கோடி டொலர்கள் இரண்டு தவணைகளில் கிடைக்கும்என்றும்உலகவங்கிவட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பின்முன்னேற்றம் மற்றும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முதல் மீளாய்வு ஆகியவற்றை உலக வங்கி அவதானித்து வருகின்றது.

இதனை அடுத்து நிர்வாகக் கூட்டத்தில் அனுமதி கிடைத்தவுடன் முதல் தவணை இலங்கைக்கு உடனடியாக வழங்கப்படலாம் என உலக வங்கி வட்டாரம்மேலும்தெரிவித்துள்ளது. (05)

## இரண்டில் ஒரு தேர்தல் இந்த வருடம் நடக்கும்

### நம்புகிறார் மஹிந்த தேசப்பிரிய

மாகாண சபைத் தேர்தல் அல்லது உள்ளூராட்சித் தேர்தல் ஆகிய இரண்டு தேர்தல்களில்ஒன்றுஇந்தவருடம்இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளதாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். அம்பலாங்கொடபிரதேசத்தில்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முன்னாள் தேர்தல் ஆணையாளரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின்தலைவருமானமஹிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக ஜனநாயக தினமான செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் எடுக்கும் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

## நாட்டில் எங்கும் எரிபொருள் தட்டுப்பாடு என்றும் இல்லை

### எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

95 ஒக்டேன் பெட்ரோல் அல்லது வேறு எந்த பெட்ரோலிய பொருள்களுக்கோ தற்போது தட்டுப்பாடு இல்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி. களஞ்சியசாலைகளில் போதியளவு எரிபொருள் கையிருப்பு இருப்பதாக அமைச்சர் விஜேசேகர தெரிவித்துள்ளார்.

95-ஒக்டேன் பெற்றோலின் நாளாந்தத் தேவை சுமார் 80 முதல் 100 மெற்றிக் தொன் என்றும் அமைச்சர் காஞ்சனவிஜேசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலியகூட்டுத்தாபனத்திடம் தற்போது 601 மெற்றிக் தொன் ஒக்டேன் 95 ரக பெற்றோல் உள்ளதோடு 9 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் வியாழக்கிழமை கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்.

மேலும், ஒக்டேன் 92 ரகம் 53,632 மெற்றிக் தொன்னும் ஓட்டோ டீசல் 103,087 மெற்றிக் தொன்னும் சுப்பர் டீசல் 2,977 மெற்றிக் தொன்னும், டீசல் மற்றும் ஜெட் ஏ1 எரிபொருள் 37,316 மற்றிக் தொன்னும் இருப்பதாக கூறியுள்ளார். (05)

## உத்தியோகபூர்வ பயணங்களுக்கு அரச பணம் செலவிடப்பட்டதாம்

### வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு



வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் 5 கோடி ரூபாக்களைத் தாம் செலவிட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மறுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ பயணங்களுக்காக மில்லியன் கணக்கான ரூபாவை செலவிட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அமைச்சர் இந்த பணத்தை 7 வெளிநாட்டு பயணங்களுக்கு செலவிட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்த தகவல் தவறானது என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட்ட ஐந்து உத்தியோகபூர்வ தேசிய தூதுக்குழு பயணங்களுக்கும், அமெரிக்காவிற்கும் சவூதி அரேபியாவிற்குமான இரு தரப்பு பயணங்களின் மொத்த செலவாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பயணங்களின்போது தாம் தூதுக்குழுக்களுக்கு தலைமை ஏற்றுச் சென்றதாகத் தெரிவித்துள்ள அலி சப்ரி, தம்மைத் தவிர மேலும் 22 அதிகாரிகள் இந்த பயணங்களில் இணைந்திருந்ததாகவும் ருவிட் செய்துள்ளார். (05)

## கதிர்காம காட்டுப் பாதையில் 25 ஆயிரம் அடியார்கள்









(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதையில் கடந்த எட்டு தினங்களில் சுமார் 25ஆயிரம் அடியார்கள் பயணித்து வருகின்றனர்.

இலங்கையின் நாலா பாகங்களிலுமிருந்து இந்து பௌத்த மக்கள் சாரி சாரியாக கூட்டம் கூட்டமாக இந்தப் பாத யாத்திரையில் கலந்து கொண்டுள்ளனர். ஜூன் 12 காலைசம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட இப்பாதை மீண்டும் ஜூன் 27 மூடப்படும். ஜூன் 19 திங்கட்கிழமை கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவம் தொடங்கியது. ஜூலை4தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருக்கின்றது..

இந்த ஊற்சவத்தை யொட்டி கடந்த வருடம் 28,820 பேர் காட்டுப் பாதையில் பயணித்திருந்தனர். இம்முறை 45 ஆயிரம் பேர் அளவில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, உகந்தை மலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவம் ஜூலை 18 கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி ஒகஸ்ட் 2 தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய இருக்கிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐ.நா. தீர்மானங்களும் ஈழத் தமிழரும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பிலான மீளாய்வு மீண்டும் விவாதத்திற்கு வருகின்றது. நாளை புதன்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான தனது வாய்மூல அறிக்கையைப் பேரவையில் சமர்ப்பிப்பார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2021 பங்குனி மாதம் நிறைவேற்றப்பட்ட 46/1 தீரர்மானம் தொடர்பானதாக இந்த வாய்மூல அறிக்கை இருக்கும்.

நேற்று கூட்டத் தொடரின் தொடக்கத்திலேயே இலங்கைக்குக் கடந்த ஒரு தசாப்த காலத்தில் பயணம் செய்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஆணையர்களால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை இலங்கை ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் உயர்ஆணையர் வொல்கர் டேர்க்வலியுறுத்தியுள்ளார். எனவே நாளை அவரது வாய்மூல அறிக்கை முக்கியமாக எந்த விடயத்தை வலியுறுத்தும் என்பதை இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள்பேரவையினால்நிறைவேற்றப்பட்டதீர்மானங்களின் கூறுகளை இலங்கை ஆட்சியாளர்கள் நிராகரித்திருப்பது கவலைக்குரிய விடயம் என்று ஆணையாளர் நேற்றே கூறிவிட்டார். அவரது அறிக்கையிலும் பெரும்பாலும் இந்தக் கருத்தே எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டவற்றை நிறைவேற்ற இலங்கை ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. கொரோனா மற்றும்பொருளாதாரநெருக்கடிகள்அவர்களுக்குவாய்ப்பாக அமைந்தன. ஐ.நா. அறிக்கைக்குப் பதி லளிக்க ஏற்ற வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பதற்கான முயற்சி என்று ஒன்றை தற்போது தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதர வுகூட இல்லாமல் தொடக்கி வைத்துள்ளார்கள். அதனை வைத்து இந்தத் தடவையும் காலத்தைக் கடத்துவதைத் தவிர இலங்கையும் புதிதாக எதையும் செய்துவிடப்போவதில்லை.

2015ஆம் ஆண்டு இலங்கை ஆட்சியாளர்களும் இணை அனுசரணை வழங்கி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றிய 30/1 தீர்மானத்தின் தொடர்ச்சியாகவே கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானம் வரையும் நிறைவேற்றப்பட்டன. ஆனாலும் இந்தத் தீர்மானங்களின் அடிநாதமான விடயங்கள் எதனையும் இலங்கை ஆட்சியாளர்கள் நிறைவேற்றவேயில்லை. அதே நேரம் இலங்கை மீதான கண்காணிப்பை விட்டுவிடக்கூடாது என்கிற கண்ணோட்டத்தில் இத்தகைய தீர்மானங்கள் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு வருகின்றன.

அதனைத் தாண்டி இந்தத் தீர்மானங்களால் தமிழ் மக்களுக்கோ இலங்கைக்கோ வேறு பயன்கள் எவையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 46/1, 51/1 தீர்மானங்கள் மூலம் இலங்கையில் இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலா ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான நிலையம் ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது தவிர்த்து, இந்தத் தீர்மானங்களால் இலங்கையில் விளைந்த மாற்றங்கள் என்று பெரிதாக ஒன்றும் இல்லை.

அதனால், 2009ஆம் ஆண்டு ஐ.நா. தீர்மானங்கள் தொடர்பில் தமிழ் மக்களுக்கு இருந்த ஆர்வமும் எதிர்பார்ப்புக்களும் இப்போது வடிந்துபோய்விட்டது. ஜெனிவாவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும் அதனை இலங்கை ஆட்சியாளர்கள் நிறைவேற்ற மறுப்பதும் தொடர்கதை என்பதைத் தமிழர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள். அதனால் இப்போதெல்லாம் ஐ.நா. ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கைகள் மீதும் பெரிதாக எதிர்ப்பார்ப்புக்கள் இருப்பதில்லை. அரசியல் கட்சிகள் மத்தியில்கூட அது ஒரு பரபரப்பான அரசியல் விவகாரமாக இப்போது இருப்பதில்லை.

இப்போது வரவுள்ள அறிக்கையும் ஏற்கனவே வந்தவற்றுடன் மற்றொன்றாக அன்றி பெரிதாக வேறெந்தத் தாக்கங்களையும் ஏற்படுத்தப்போவதில்லை என்பது தெரிகின்றது. இருப்பினும் போரில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட அநியாயங்களுக்கான சாட்சியாக இந்த அறிக்கைகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன.

# இலக்கியத்தில் இணைந்த பனை

அங்கம் - 1



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

மனிதவாழ்வுக்கும் மரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மனிதன் தன்னுடைய ஆரம்பத்தை ஆரம்பித்ததே மரங்களுக்கு மத்தியிலேதான்.

அப்படி ஆரம்பித்த மனிதன் நாளடைவில் மரங்களின் இணைப்பிலிருந்து விடுபட்டு மரங்களை ஒருபக்கமாக ஒதுக்கிவிட்டு, மரமற்ற இடங்களை வாழ்வாக்கி வாழத் தலைப் ட்டு விட்டான். மனிதன் ஒதுக்கினாலும் மரங்களின்றி மனித வாழ்வு திருப்தி அடை வதாக இல்லை என்றே சொல்ல லாம்.மரங்களும் மனிதனை விட்டு விடுவதாகவும் இல்லை. காட்டு மரங்கள் என்னும் நிலை மாறி நா ட்டு மர ங்களிடையே மனிதன் வாழும் ஒரு நிலை உருவாகி இருப்பதை இன்று கண்டு கொள்ளமுடிகிறது எனலாம்.

இந்திலையில் கற்பகதரு என்று போற்றப்படும் பனையையும் , அதன் வரலாற்றையும், அதன் பயன்பாட்டையும், அதன் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளுவது பொருத்தமாய் இருக்கும் என்று கருதுகிறேன்.

பனை என்பது உலகில் பல இடங்களையும் தொட்டே வருகிறது எனலாம்.

உலக அளவில் நோக்குகையில் பனையின் தொகை யானது ஏறத்தாள நூற்று ஐம்பது மில்லியன்கள் வரை இருக்கலாம் என்று புள்ளி விவரங்கள் மூலம் அறியக்கிடக்கின்றது.

கற்பகதருவான பனையின் தொடக்கம் எப்போது எனும் வினாவுக்கு சரியான விடையினை பனைபற்றி ஆராய்ந்த தாவரவியலாளர்களே கூறமுடியாத நிலையில் மிகவும் தொன்மைமிக்கதாய் விளங்குகிறது என்பது முக்கிய கருத்தெனலாம்.ஆபிரிக்காவில்த்தான் இம்மரம் முதலில் தோன்றி இருக்கலாம்.அதன் பின்னரே தான் மற்றைய இடங்களுக்கும் பனையானது வந்து சேர்ந்திருக்கலாம் என்னும் கருத்தும் காணப்படுகிறது.

இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, மடகஸ்கார், கம்பூச்சியா, தாய்லாந்து, மியன்மார், என்று பல இடங்களில் பனை காணப்படுகிறது. இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் பெருமளவு பனைகள் இருக்கின்றன. கிழ க்கு மாகாணத்திலும் கணிசமாக பனை காணப்படுகிறது. கிழக்கில் பனை இருந்தாலும் பனையின் எழுச்சி என்பது இலங்கையில் வடபகுதியிலேயே இருக்கிறது என்றே கொள்ளலாம். ஏனென்றால் அங்கு காணப்படும் வறட்சிதான் முக்கிய காரணமாய் அமைகிறது என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

பனை மரத்தைப் பற்றி எங்கள் இலக்கியங்களும் கூறி நிற்கின்றன. இலக்கியங்களில் கையாளப்படும் அளவுக்கு எங்கள் கற்பகதரு இருக்கிறது என்றால் அதன் பெருமையினை நாங்கள் கருத்திருத்துவதும் அவசியம் அல்லவா !

பனையினைத் தமிழர் தங்கள் மரம் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளுவார்கள். நினைப்பதைக் கொடுக்கும் நிலையில் இருப்பதால் இதனை கற்பகதரு என்று போற்றிவருதும் வழமையாய் இருந்துவருகிறது.

குழந்தைகள் முதல் பெரியோர்கள்வரை பனையோடு நெருக்கமாய் உறவாடியே வந்திருக்கிறோம்! பனை முற த்தால் எங்கள் மறத் தமிழ் பெண் புலியையே விரட்டினாள் என்பதையும் எங்கள் இலக்கியங்கள் காட்டுவதை யும் நாம் கருத்திருத்த வேண்டும் !

சங்க இலக்கியம் தொடக்கம் எங்கள் தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் வரை கற்பகதருவாம் பனையினை வியந்தே நிற்பது கருத்திருத்த வேண்டிய வியம் அல்லவா !

............................ ஏந்துபுகழ்
போந்தை வேம்பே ஆரென
வரூஉம்
மாபெருந்தானை மலைத்த பூவும்

என்று தொல்காப்பியம் காட்டி நிற்கிறது. இங்கு பனையினைக் காண வில்லையே என்று எண்ணுகிறீர்களா ? போந்தை என்னும் சொல் பனையின் பூவினைக் குறிக்க சங்ககாலம் பயன் படுத்திய தாகும்.அதனையே தொல் காப்பியம் காட்டி நிற்கிறது. ஏந்துபுகழ் போந்தை என்றால் - உயர்வான புகழினை உடைய பனம் பூ - என்பது அர்த்தமாகும். பனையானது பழந்தமிழர் வாழ்வில் எந்தளவுக்குச் சிறப்பினைப் பெற்றிருக்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய வியம்தானே !

புறநானூறிற்றிலும் பனையின் பெருமை சுட்டிக் காட்டப்படுகிறது.

கையது வேலே காலது புனைகழல்
மெய்யதுவியரேமிடற்றதுபசும்புண்
வட்கர் போகிய வளரிளம் போந்தை

கையிலேவேல்,காலிலேவீரக்கழல், உடலிலிலே வேர்ப்பு, கழுத்திலே பசும் புண், இவற்றுடன் பனம்பூம் மாலையும் -உடைய வனாய் அதியமான் என்னும் அரசன் காணப்பட்டான் என்று புறநானூறு புகன்று நிற்கிறது. இங்கும் போந்தை என்னும் சொல்லானது பனம்பூவினாலான மாலையைக் குறிக்க வந்திருகிறது.

அரசனின் போர்க்கோலத்தில் பனையின் பூவினால் ஆகிய மாலை அக்காலத்தில் முக்கியமான ஒன்றாக விளங்கி இருக்கிறது என்பது பனைக்குக்கிடைத்த முக்கியத்துவத்தை தெரிவிக்கிறது அல்லவா !

இரும்பனையின் குரும்பைநீரும் ( பனை நுங்கின் நீர் ), இரும் பனை வெண்தோடு மலைந்தேன் அல்லன் ( பனம்பூச் சூடிய சேரன் அல்லன் )

என்றும் புறநானூறு காட்டி நிற்கிறது. பனைபற்றிய எடுத்துக் காட்டுகள் புறநானூற்றில் இன்னும் பல இடங்களில் சுட்டப்படுவதும் கருத்திருத்த வேண்டியதே. மடல் இலக்கியத்திலும் பனையினைக் காணுகிறோம்.

கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய சங்கத் தமிழும் பனையினைத் தொட்டுக் காட்டுகின்றன என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும்.

சிலம்பும் , வள்ளுவமும் பனையினை விட்டுவிடவில்லை.சிலம்பில் மூவேந்தர்களுடைய மாலைகள் பற்றி வரும்வேளைபனையும்வந்துநிற்கிறது.

தோள் நலம் உணீய கம்பைப் போந்தையொடு பலர் தொழ வந்து மலாவிழ் மாலை போந்தைக் கண்ணிப் பொலம்பூ தெரியல் என்னும் சிலம்பின் பாடல்கள் பனையின்பூ மாலைகள் பற்றிக் காட்டி நிற்கிறது.

தினைத் துணை நன்றி செயினும்
பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்.

என்று வள்ளுவம் பனையினைப் பக்குவமாய் காட்டி இருக்கிறது.

கடையார் நட்பிற் கமுகனையர்
ஏனை
இடையாயார் தெங்கின் அனையர்
- தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன்று
இட்டஞான்றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு

என்றுநாலடியார்என்னும்அறநூல் பனையின் பெருமையைப் பறைசாற்றி நிற்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். நால டியார் பனையினைப் போற்றுவதைக் காண்பதிலிருந்து பனையென் னும் கற்பகதருஅக்காலத்தும்பெருமை மிக்கதாய் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது அல்லவா !

நடுவூருள் வேதிகை
கற்றுக்கோட் புக்க படுபனை
யன்ன பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக்ககண்ணுங்
கொடுத்துண்ணா மக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை

நாலடியார் இங்கும் பனைபற்றி சொல்கிறது. பெண்பனையினை யாவரும் - நல்லவர்களை அதாவது வள்ளல்களை விரும்புவது போல் ஊர் நடுவே விரும்பிபுவர் என்று காட்டுவது நோக்கத் தக்கது.

ஆண்பனை அப்படி அல்ல என்று காட்டினாலும் பனை பற்றிய நிலை காட்டப்படுவது கருத்திருத்த வேண்டியதே !



( வளரும்...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
Milk Drink
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி தேசிய ரீதியில் சாதனை







(அஸ்ஹர் இப்றாஹிம்)

மென்பொருள் சேவை நிறுவனங்களுக்கான இலங்கை சங்கத்தால் 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய புத்தாக்க சிந்தனைகளுக்கான விருதுகளில் தொழில்நுட்ப சிறார்கள் பிரிவில் மென்பொருள் உருவாக்கங்களுக்காக நடைபெற்ற போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி ஸு்ஹ்றஷா நதா (வயது - 13) தேசிய ரீதியில் வெற்றி பெற்ற 5 சாதனையாளர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புசங்கரில்லாஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், நிறுவனங்கள் என பல்வேறு பிரிவுகளுக்குமான புத்தாக்க சிந்தனைகளுக்கானதேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் 9 இல் கல்வி கற்கும் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஸு்ஹ்றஷா நதாவினால் முன்மொழியப்பட்ட சிறுவர்களுக்கான எஸ்.டி.ஏ. கற்றல் தொடர்பான மொபைல் பயன்பாட்டுமென்பொருள்செயலிக்காக இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

இவ்விருது வழங்கும் நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்து கொண்ட நோர்வேயின்தூதுவர்ரினிஜோர்னலி எஸ்கடேலியால் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தகம், கல்வி மற்றும் வேலை வாய்ப்பைப்பரப்புதல், ஆராய்ச்சிமற்றும் புதுமைகளை ஊக்குவித்தல் போன்ற செயற்திட்டங்களின் மூலம் தொழில் துறையின் வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக பங்களிப்பை செய்து வரும் மென்பொருள் சேவை நிறுவனங்களுக்கான இலங்கை சங்கம் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு புத்தாக்க சிந்தனையாளர்களுக்காக கடந்த சில வருடங்களாக இந்த விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்று வருகின்றமை சிறப்பம்சமாகும். இம் மாணவி தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா மற்றும் அஸ்ரப்ஹஸ்னாஷெரீபின்ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார். (05)

## உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு கிழக்கு ஆளுநரால் தீர்வு



(அபு அலா)

கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருந்த விவசாயிகளுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தீர்வைப் பெற்றுக்கொடுத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமதொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் உரப்பற்றாக்குறையால் தமது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அதற்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் மூன்று மாவட்ட விவசாயிகளும் கோரிக்கை முன்வைத்தனர்.

விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, விரைவாக உரிய தீர்வு பெற்றுத்தரப்படுமென விவசாயிகளுக்கு வாக்குறுதியளித்திருந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டுசென்றதுடன் உரப் பற்றாக்குறைக்கு தீர்வையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் உரப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு போதிய உரத்தை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை கமத்தொழில் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

பல காலமாக நிலுவையில் இருந்த இந்தப் பிரச்சினைக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் உடனடி தீர்வு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

## களுதாவளை சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா!

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க, களுதாவளை சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா உற்சவம் சனி இரவு ஆரம்பமானது.

இலங்கையில் மிகவும் பண்டைய ஆலயங்களுள் ஒன்றான பெருமையைக் கொண்ட ஆலயமாக காணப்படும் களுதாவளை சுயம்புலிங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார திருவிழா பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

கடந்த சனிக்கிழமை சமய கிரியைகளுடன் ஆரம்பமாகி கும்பபூஜை, யாகபூஜை நடைபெற்று சுயம்புலிங்கப் பிள்ளையாருக்கு விசேட அபிசேகம் மற்றும் பூஜைகளும் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் எழுந்தருளியுள்ள சுயம்புலிங்கப்பிள்ளையார் மற்றும் முருகப்பெருமான், சிவன் ஆகியோருக்கு விசேட பூஜைகள் நடைபெற்றதுடன் உள்வீதி வெளிவீதியுலாவும் நடைபெற்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஆலயத்தின் சிறப்புமிக்க ஆனி உத்தர தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (05)

# அறநெறிப் பாடசாலைக்கு சீருடை வழங்கும் நிகழ்வு

திருகோணமலை - அலஸ்தோட்டம் நாகம்மாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்காக திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் 2 லட்சத்து 30ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர்சண்முகம்குகதாசன் இதற்கான காசோலையை மேற்படி அறநெறிப் பள்ளித் தலைவர் சுந்தரலிங்கத்திடம் வழங்கி வைத்தார்.

தமிழ்ப் பண்பாடு மற்றும் சைவநெறியைப் பேணிப்புரக்கும் நோக்கோடு செயற்பட்டு வரும் அறநெறிப் பாடசாலைகளில் அலஸ்தோட்டம் நாகம்மாள் அறநெறிப் பள்ளி முதன்மையான தொன்றாகும்.

இந்த அறநெறிப் பாடசாலையில் 125 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் எனவும் இவர்களுக்குச் சீருடை இல்லாத குறையை நீக்கும் பொருட்டாகத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம்சீருடைகொள்வனவுக்காக 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை கடந்த ஞாயிற்றுக்கிழமை நாகம்மாள் அறநெறிப் பாடசாலைக்கு வழங்கியது. திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர்சண்முகம்குகதாசன் இதற்கான காசோலையை மேற்படி அறநெறிப் பள்ளித் தலைவர் சுந்தரலிங்கத்திடம் வழங்கி வைத்தார்.

குச்சவெளியைச் சேர்ந்த திருச்செல்வம் பிரபாகரன் நினைவாக இச்சீருடைக்கான காசோலை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)











காலைக்கதிர்
Kalaikkathir

# விமலைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் அதிரடி உத்தரவு!



முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கொழும்புநீதிவான்நீதிமன்றம்நேற்றுப்பிடியாணை பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதன் காரணமாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் மூலம் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்று அவருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளராகச் செயற்பட்ட இளவரசர் செயித் ராத் அல் ஹுசைன் இலங்கைக்குப் பயணம் செய்தபோது, விமல் வீரவன்ஸ இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

கைது ஆணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து வழக்கு செப்டெம்பர் 11 விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது..

## சர்வதேச கடன்மறுசீரமைப்புக்கு சாதகமான சூழலை ஜனாதிபதி ரணிலின் பிரான்ஸ் விஜயம் ஏற்படுத்துமாம்

### நம்புகின்றார் ஷெஹான் சேமசிங்க



ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் இவ்வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நாட்டில் வெளிப்படை தன்மையையும், ஒழுக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு இந்த சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

எனவே எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இதனை எதிர்த்து வாக்களிக்கமாட்டார்கள் என நம்புகிறார் எனப் பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரான்ஸ் விஜயம், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பான பேச்சுகளில் சாதகமான பதிலைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமையும் என்றும் பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இவ்வாண்டின் நடுப்பகுதியில் எதிர்பார்த்ததைவிட பொருளாதாரம் உயர்மட்டத்தை அடையும். வெகுவிரைவில் பொருளாதாரம் முழுமையான ஸ்திரத்தன்மையை அடையும் என நம்புகின்றோம்.

எவ்வாறிருப்பினும், எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சில கட்டுப்பாடுகள், பொருளாதாரத்துடன் தொடர்புடைய தீர்மானங்கள் என்பவற்றில் தளர்வுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கவில்லை. காரணம், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாம் கட்ட கடன் தொகையை மாத்திரமே பெற்றுள்ளோம். கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பேச்சு மட்டத்திலேயே உள்ளன. அவை இன்னும் இறுதிக் கட்டத்தை அடையவில்லை. எனினும், முதலாவது மீளாய்வின் பின்னர் கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டை எட்டமுடியும்என்று எதிர்பார்க்கின்றோம்.

எனினும், 2024இல் பொருளாதார வளர்ச்சி வேகத்தை நோக்கி எம்மால் பயணிக்கமுடியும். சர்வதேசசந்தைக்குள் நுழைவதன் ஊடாக பொருளாதாரத்தை துரிதமாக பலப்படுத்த முடியும்.

இன்று வட்டி விகிதங்கள் குறைவடைந்து வருகின்றமை சிறந்த சமிக்ஞையாகும். கடந்த ஓராண்டுக்கு முன்னர் அத்தியாவசிய சேவைகளைக்கூட வழங்கமுடியாதநிலைமையிலேயே நாம் காணப்பட்டோம். எனினும், இவ்வாண்டு அந்த நிலைமையை வெற்றிகரமாகக் கடந்துள்ளோம்.

எதிர்காலம் குறித்து மிக அவதானத்துடன் சிந்தித்து செயற்படுவோம். சில தீர்மானங்களால் மக்கள் எதிர்கொள்ள நேரிடும் சிக்கல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம்.

இதில் மிக முக்கியமானது ஊழல், மோசடிகளை முற்றாக இல்லாதொழிப்பதாகும். அந்த வகையில், இந்த வாரம் மிகவும் தீர்க்கமானதாகும். இவ்வாரம் ஊழல் ஒழிப்பு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் இதனை எதிர்த்து வாக்களிக்க மாட்டார்கள் என நம்புகின்றோம். ஊழல் ஒழிப்பு சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டில் வெளிப்படைத்தன்மையையும், ஒழுக்கத்தையும் நிலைநாட்ட முடியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரான்ஸ் விஜயம் சர்வதேச கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் சாதக மான பிரதிபலனை பெற்றுக்கொடுக்கும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு படிப்படியாக தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதோடு, படிப்படியாக அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். - என்றார். (05)

## நாட்டின் தற்போதைய பிரச்சினைக்கு தேர்தலுக்குச் செல்வதே ஒரே தீர்வு

### வே.இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். அரசாங்கத்துக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த குழப்பங்களுக்கு ஜனாதிபதியே காரணம் என அனைவரும் உணர்ந்துள்ளனர். மேலும் அரசியல் ஸ்திரத்தன்மையைச் சீர்குலைக்காது உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்வதே நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர், நாட்டின் அரசியல், பொருளாதார நிலைமை தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

மொட்டுக் கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க இன்று என்ன செய்வது என்பது தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

அரசாங்கத்துக்குள் நிலவும் குழப்பங்களும், மொட்டுக் கட்சிக்குள் நிலவும் குழப்பங்களுமே இதற்கு பிரதான காரணங்களாகும். நிரந்தரமில்லாத அரசாங்கத்தினுள் இன்று ஜனாதிபதியாக செயற்பட்டுக் கொண்டு மேலும் நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற நிலையை தோற்றுவிக்கும் நபராக அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தற்போது நாட்டின் டொலர் பெறுமதி மீண்டும் அதிகரித்துள்ளது. பொருள்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளது. மீண்டும் இலங்கையில் பொருளாதார தளம்பல் ஏற்பட்டு பொருளாதார நெருக்கடிகள் தோன்றும் நிலை ஏற்படுவதை அவதானிக்க முடியுமாகவுள்ளது. இதேவேளை தற்போது அரசியல் ஸ்திரமற்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த அரசியல் உறுதியில்லாத நிலையை உருவாவதற்கு காரணமாக இருந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பது எல்லோரும் உணர்ந்துள்ளனர்.

இந்நிலையில் உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலின் ஊடாக புதிய நாடாளுமன்றத்தை உருவாக்கி ஸ்திரதன்மை வாய்ந்த பலமான அரசியலை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டின் எதிர்கால சந்ததியினர் வாழ்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க முடியும். - என்றார். (05)

## நாடாளுமன்றைக் கலைத்து புதிய அரசியல் சூழலை உருவாக்கும் சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குக

### முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்து



நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து, புதிய அரசியல் சூழலை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்த தரப்பினருடன் இணைந்து பொருளாதாரத்தை ஸ்திரமடைய செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாடு, கடந்த ஆண்டை விட இவ்வாண்டு முன்னேற்றமடைந்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டாலும், சர்வதேசம் இலங்கை எந்த மட்டத்திலுள்ளது என்பது தொடர்பாக அவதானமாகவே உள்ளது.

கடந்த ஆண்டை விட இவ்வாண்டு மக்களின் அடிப்படை செலவுகள் 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மக்கள் தமது அன்றாட உணவு தேவைக்காக 53 சதவீதத்தை செலவிடுகின்றனர். உணவற்ற தேவைகளுக்காக 47 சதவீதத்தை செலவிடுகின்றனர்.

கடன்களைமீளசெலுத்துவதற்காக 23 சதவீதத்தையும், எரிபொருளுக்காக 13 சதவீதத்தையும் செலவிடுகின்றனர்.

அத்தோடு நாட்டில் வருமானம் குறைந்தவர்களின் எண்ணிக்கை 60 சதவீதமாக அதிகரித்துள்ளது. பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளமையே இதற்கான காரணமாகும்.

சுமார் 14 லட்சம் குடும்பங்கள் வறுமை நிலையிலுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இவ்வாறானநிலைமையிலும் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தில் மாத்திரமே தங்கியுள்ளது.

மக்களின் வாழ்வாதாரத்தைமேம்படுத்துவதற்காக உற்பத்தி பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரசாங்கத்திடம் அதற்கானஎவ்விததிட்டமிடல்களும் இல்லை.

எனவே நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து , புதிய அரசியல் சூழலை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம். நாட்டை வங்குரோத்தடையச்செய்த தரப்பினருடன் இணைந்து பொருளாதாரத்தை ஸ்திரமடைய செய்ய முடியாது. - என்றார். (05)

## இராஜாங்க அமைச்சர் பிரசன்னவின் வீட்டின் மீது மர்ம நபர்கள் தாக்குதல்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான பிரசன்ன ரணவீரவுக்குச் சொந்தமான இரண்டு மாடி வீடு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சரச்சந்திர டயஸ் மாவத்தை, கோனவில, பமுனுவில என்ற முகவரில் அமைந்துள்ள அமைச்சரின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலால் வீட்டின் எட்டு ஜன்னல்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலின் போது வீட்டில் எவரும் இருந்திருக்கவில்லை என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## அரசியல்வாதிகளால் செய்துமுடிக்க முடியாத வேலைகளை அர்ப்பணிப்பு மிக்க அதிகாரிகள் செய்துவிட்டு போகிறார்கள்!

### அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ் கருத்து

அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் மாணவத் தலைவர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வுகளில் கல்வி அமைச்சின் முஸ்லிம் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் என்.ரி.நசுமுடீன் மற்றும் அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் ஏ.எம்.ரகுமத்துல்லா உள்ளிட்ட கொழும்பு சாகிறா கல்லூரியின் அதிபர் கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி அதிபர் மற்றும் வைத்தியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் நீச்சல் பயிற்சி தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது. இதன் பின்னராக பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு தலைமைத்துவ விழிப்புணர்வு உரைகளும் நிகழ்வின் நோக்கம் பற்றிய கருத்துகளும் அதிதிகளால் முன்வைக்கப்பட்டன. இதேநேரம் மாணவர்கள் குழுக்களாக இணைந்துகுழுச்செயற்பாட்டிலும் ஈடுபட்டனர். அத்தோடு மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட புத்தாக்க உற்பத்தி பொருள்களின் கண்காட்சியும் இடம் பெற்றது.

மாணவ தலைவர்களின் மனப்பாங்கு மற்றும் உளவிருத்தி செயற்பாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் செயலமர்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதுடன் எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் வேலைத் திட்டமாகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ் கருத்து தெரிவிக்கும் போது -

மாணவர்களின் உயர்ச்சிக்காக இயங்கும் என்.ரி.நசுமுடீனை மனதார வாழ்த்துகின்றோம். அர்ப்பணிப்புடன் இயங்கும் அதிகாரிகள் பல அரசியல்வாதிகளால் செய்துமுடிக்க முடியாத வேலைகளைக்கூட இலகுவாக செய்துவிட்டு போகின்றார்கள் உதாரணமாக என்.ரி.சிராஜுதீன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளராக இருந்தபோது பல ஊர்களுக்கு நவீன வீதி விளக்குகள் மற்றும் காப்பெட் வீதிகளை இலகுவாக கொண்டு சேர்த்திருந்தார். அதேபோன்று கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் விவகாரங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் என்.ரி.நசுமுடீன் முதன்முறையாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நிகழ்வை ஒழுங்கமைத்துக் கொடுத்திருந்தார்.

இளமைப் பருவத்திலிருந்து வாதங்களை களைந்து சிறந்த தலைவர்களை உருவாக்கும் அவர்களது முயற்சி அளப்பெரியது அவருக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயங்கக்கூடிய அதிகாரிகளை நாம் ஏன் உருவாக்க வேண்டும்? என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும் இந்நிகழ்வுகளை சிறப்பாக நடத்தி முடிக்க உதவிய அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகள் உரித்தாகட்டும் என்று தெரிவித்துள்ளார். *(05)*

## அடுத்த ஜனாதிபதியையும் பெரமுனவே தீர்மானிக்கும்

### அடித்துக் கூறுகிறார் சாகர

நாட்டின் அடுத்த ஜனாதிபதியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே தீர்மானிக்கும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் அடுத்த நாடாளுமன்றிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கும் என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் அநுரகுமார திஸாநாயக்கவின் கட்சி, நாட்டில் மீண்டும் வன்முறையான கலாசரத்தை ஏற்படுத்தவே கடந்த காலங்களில் செயற்பட்டது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

தங்களின் கருத்துக்கு இணங்காத நபர்கள் மீது தாக்குதல் நடத்தி, நடுவீதியில் வைத்து கொலை செய்து மோசமான கலாசாரத்தை ஏற்படுத்த முற்பட்டார்கள் என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மேலும் தமது கட்சியின் உறுப்பினர்கள் மீது இனிமேலும் தாக்குதல் நடத்த இடமளிக்கப் போவதில்லை என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (05)

# இளைஞர்கள் தொழில் இன்மையால் பிழையான பாதையில் பயணித்து குற்றவாளிகளாக மாறினர்

## இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

நாடோ அதால பாதாளத்தில் சென்று நாட்டின் பொருளாதார சிக்கலால் பல இளைஞர்கள், அரச உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் போன்ற தொழில் வாண்மையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர், பலர் தொழில் நிலை பெற்றவர்களாக உள்ளனர், இன்னும் சிலர் போதைக்கு அடிமையாக உள்ளனர், மேலும் பலர் வறுமையால், தொழிலின்மையால் பிழையான பாதையில் பயணித்து தண்டனைக்குரிய குற்றவாளிகளாக மாறி வழக்கும் கையுமாக அலைகின்றனர். யுவதிகளுக்கான வாழ்வியல் வசதிகள் தற்போது உள்ளதா? எதுவுமே இல்லை. பல இளவயது திருமணங்களால் பல வாழ்க்கை சீரழிவுகளை யுவதிகள் அனுபவிக்கும் கால சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் தெரிவித்தார்.

ஐந்தாவது இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் 3 ஆவது அமர்வு 17,18 ஆம் திகதிகளில் ஜனாதிபதி செயலக பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது உத்தேச இளைஞர் நாடாளுமன்ற சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த உரையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

உத்தேச இளைஞர்கள் நாடாளுமன்ற சட்ட மூலத்தின் பிரதான நான்கு பிரிவுகளாக தலைமைத்துவம், ஜனநாயக அமைப்பு, நாடாளுமன்ற நடைமுறை, நாடாளுமன்ற உறுப்புரிமை ஆகியன காணப்படுகின்றன. எனது பிராந்தியத்தில் இளைஞர்களுக்கான தலைமையாக பெரும்பான்மையான நண்பர்கள், சகோதரர்கள் ஊடாக இந்த நாடாளுமன்றம் வந்திருந்தேன்.

இந்த நாடாளுமன்றம் ஊடாக நன்றிக் கடன் செலுத்த முடியுமா என அலசிக் கொண்டு சென்ற போது எந்த வாய்ப்பும் நாடாளுமன்றம் ஊடகவோ, இங்கிருக்கும் அமைச்சர்கள் ஊடாகவோ கிடைக்கப் பெறவில்லை. இருந்த போதிலும் இளைஞர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அந்தஸ்தை வைத்துக் கொண்டு பல சேவைகளை உள்ளூர், வெளியூர் முதலீட்டாளர்கள் கொண்டு செவ்வனே செய்து முடிந்தளவு நன்றிக் கடன் செலுத்தியுள்ளேன் என்பதில் மனமகிழ்ச்சி.

ஜனநாயக நாட்டில் ஜனநாயக அமைப்பானது ஜனநாயக பெறுமதி, ஜனநாயக கலாசாரம் என்ற பிரதான அம்சங்கள் கொண்டிருந்தாலும் இந்த உயர் சபைக்கு தேசிய ஜனநாயகத்தில் என்ன கிடைத்தது என்றால் கேள்வியாகவே கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் நாம் உள்ளோம். நாடாளுமன்ற நடைமுறையே மக்களுக்கு தேவையானவற்றை பூர்த்தி செய்து கொள்ளும் இலகு வழி. இங்கிருந்து சட்டமூலம் உருவாக்கம், கொள்கை திட்டங்கள் உருவாக்கம் என்பன நாட்டு மக்கள், இளைஞர்கள் சார்ந்துள்ளன. இந்த உயர் சபையின் ஊடாக பல புதிய சட்டமூலங்கள், புதிய கொள்கைத் திட்டங்களைக் கடந்த காலங்களில் நாம் விவாதத்துக்கு கொண்டுவந்தோம். ஆனால் எங்களுடைய கொள்கைகள் எங்கே? சட்டமூலங்கள் எங்கே? சட்டம் வலுவாக இருந்தாலும், இளைஞர்கள் நாடாளுமன்றத்தின் ஊடாக இடம்பெறும் செயற்பாடுகள் போதுமானவையாக இல்லை. அதிகாரமில்லா சபையாகவே இச்சபை இயங்கி வருகின்றது. இங்கு கொண்டு வரப்படும் சட்டங்கள், கொள்கைகள் ஒவ்வொரு துறைசார் அமைச்சின் ஊடாக நாடாளுமன்றத்தில் கவனத்திற் கொள்ளப்பட்டால் இங்கு பல மாற்றங்கள் கொண்டு வரமுடியும்.

தேசிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் இளைஞர்களுக்கான தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், கல்வி ஊக்குவிப்பு நிகழ்வுகள், போதை அழிவுகளுக்கான அறிவுறுத்தல் நிகழ்வுகள், குற்றங்களும் தண்டனைகளும் எனும் தொனியில் கருத்தரங்குகள் செய்ய இந்தச் சபையின் இன்றைய அறிக்கையில் இணைத்து உரியவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என சபாநாயகருக்கு ஆலோசனை வழங்குகின்றேன்.

நாட்டின் பொருளாதாரம் உயர்வடைய எம்மைப் போன்ற இளைஞர்கள் பிரதிநிதிகளின் ஊடாக பல நல்ல திட்டங்களை மக்கள் மயப்படுத்தி செயற்படுத்த ஆலோசனை வழங்குகின்றேன். இங்குள்ள அனைவரும் மக்கள் பிரதிநிதிகள். எனவே இன்றைய தினத்தோடு இந்த நாடாளுமன்றம் கலைந்தாலும் எதிர்கால இலங்கைக்கான தேசிய இளைஞர்களை ஒன்றினைக்கும் செயற்குழுவாக செயற்பட அனைவரையும் அழைக்கின்றேன். இந்த உயர்சபையில் பல உறவுகள், புது அறிமுகங்கள் கிடைத்திருந்தன.

இந்தசபையில் உள்ள அனைவருக்கும் நன்றிகள், உங்கள் சேவைகளுக்கு வாழ்துக்கள் கூறுகின்றேன். அடுத்தடுத்து அமையும் நாடாளுமன்றம் வலுவானதாக அமைய வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மகேசன், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர் பசிந்து குணரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

(05)

# அபான்ஸ் குழுமங்களின் முகாமைத்துவ பணிப்பாளர் பெஸ்டோன்ஜி காலமானார்

அபான்ஸ் குழுமங்களின் முகாமைத்துவ பணிப்பாளர் டிட்டோ பெஸ்டோன்ஜி காலமானார்.

முகாமைத்து பணிப்பாள ராக பணிபுரிந்த காலத்தில் பெஸ்டோன்ஜி குழுமத்தை மிகவும் உயர்ந்த நிலைக்கு கொண்டுசென்றிருந்தார்.

தென்கொரியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை சிறப்பாக கையாண்டமைக்காகவும் சில்லறை விற்பனையில் மிகவும் சிறந்துவிளங்கியமைக்காகவும் தென்கொரிய அரசாங்கம் பெஸ்டோன்ஜிக்கு விருதை வழங்கி கௌரவித்திருந்தது.

(05)



# முதல் தமிழ்ப் பெண் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் காலமாகிவிட்டார்!



இலங்கையின் முதல் தமிழ் பெண் ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவியுமான சாந்தா அபிமன்னசிங்கம் தனது 77 ஆவது வயதில் காலமானார்.

யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தின் நீண்டகாலத் தலைவியாகச் செயற்பட்ட அவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீதிமன்றங்களின் செயற்பாடுகளிலும் சட்டத்தரணிகளின் நலன்களிலும் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டவராவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் மற்றும் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் 11 மணியளில் அவரது உடுவில் இல்லத்தில் இடம்பெற்றது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(05)

# தம்பலகாமத்தில் நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுனரின் அறிவுறுத்தலுக்கமைய கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரனையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகமும், தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை ஜூன் 21 புதன்கிழமை காலை .8.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன் தெரிவித்தார்.

இதில் குருதிப் பரிசோதனை, கண் பரிசோதனை, பற் சிகிச்சை, வெளிநோயாளர் பிரிவு பொது வைத்திய சேவை, ஆயுர்வேத வைத்திய சேவைகள் இடம்பெறவுள்ளன.

ஆற்றுப்படுத்தல், சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவிகளைப் பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு, நோய் உதவிக் கொடுப்பனவு (புற்று நோய், சிறுநீரக நோய்) , மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், முதியோர் தேசிய அடையாள அட்டை இறப்பு பிறப்பு சான்றிதழ் தொடர்பான பல சேவைகள் அன்றைய தினம் இடம் பெறவுள்ளதுடன் பொது மக்கள் கலந்து கொண்டு இலவச சேவையினை பெறுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

# நண்பர்கள் அணி வெற்றி







நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலை பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட கட்டார் வாழ் இலங்கையர்களுக்கான இரட்டையர் பூப்பந்து சுற்று போட்டி தொடரில் நண்பர்கள் பூப்பந்து கழகம் சம்பியன் ஆகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்த போட்டியில் சஹி மற்றும் தாணு ஆகியோர் நண்பர்கள் பூப்பந்து கழகம் சார்பில் போட்டியில் கலந்து கொண்டு சுற்றுத் தொடரின் ஆட்டநாயகன் விருதை சஹி தனதாக்கிக் கொண்டார்.

(05)

# நோயற்ற மாடுகளே கல்முனையில் இறைச்சிக்கு அறுக்கப்படுகின்றன

## கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல தெரிவிப்பு

(ஏ.எம்.அஸ்லம்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக அறுக்கப்படும் மாடுகள் நன்கு பரீட்சிக்கப்பட்டு, நோயற்ற மாடுகள் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படுவதாக மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டப்பொல தெரிவித்தார்.

இது குறித்து திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக நாட்டின் சில பகுதிகளில் மாடுகள் சிலவற்றுக்கு ஒரு வகையான தோல் நோய் பரவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் கல்முனை மாநகர சபை எல்லையினுள் உணவுக்காக மாடுகள் அறுக்கப்படுகின்ற விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

குறிப்பாக விலங்கறுமனைகளுக்கு அறுவைக்காக கொண்டுவரப்படுகின்ற மாடுகள் அனைத்தும் எம்மால் நன்கு பரீட்சிக்கப்பட்டு, எவ்வித நோயும் அற்றவை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை அறுப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

நோய்த் தொற்றுக்குள்ளான அல்லது சந்தேகத்திற்கிடமான மாடுகளை அறுப்பதற்கு எம்மால் அனுமதி வழங்கப்படுவதில்லை.

மேலும், தற்போதைய சூழ்நிலையில் மாடுகளை கொள்வனவு செய்யும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் குறித்து மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம்.

ஆகையினால், இது விடயத்தில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை- என்றார் அவர்.

# களனியில் வீட்டிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

களனிப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

42 வயதுடைய பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த பெண் சில நாள்களுக்கு முன்னர் இறந்திருக்கலாமென பொலிஸார் சந்தேகிப்பதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir



## உள்நாட்டு.....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் அதனை விடவும் சிறப்பான முன்னேற்றத்தை அடையமுடியும்என்றபெரும் நம்பிக்கை உள்ளது.

2024 ஆம் ஆண்டில் ஒரு நல்ல, சாதகமான ஆண்டைநோக்கிநகர்வதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். இதுவரையிலான பயணத்தில், எதிர்பார்த்ததை விட அதிக பலன்களை எங்களால் எட்ட முடிந்துள்ளது. எனவே, அரசாங்கத்தின் அர்ப்பணிப்பைத் தொடர வேண்டியது அவசியமாகும். மேலும், நமது நாட்டில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படல், ஊழல், மோசடி போன்றவற்றிற்கு இடமளிக்காமைபோன்றவிடயங்களில் நமது நாடு அடைந்துள்ள முன்னேற்றம், தற்போது சர்வதேச அளவில் பேசுபொருளாகியுள்ளது.

குறிப்பாக, நாடாளுமன்றத்தில் இந்த வாரம், இலங்கையின் பொருளாதாரம் குறித்தும், நிர்வாகக் கட்டமைப்பு, நிதிக் கட்டமைப்பு தொடர்பாக நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் வாரமாக மாறும். வரவுசெலவுத்திட்ட அலுவலகம் தொடர்பான சட்ட முன்மொழிவு நாடாளுமன்றத்தில் கலந்துரையாடி நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று, நமது நாட்டில் ஊழல், முறையற்றதன்மை மற்றும் வீண்விரயத்தை ஒழிக்கும் வகையில், 'ஊழலுக்கு எதிரான சட்ட முன்மொழிவு புதன்கிழமை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த விடயங்கள் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை.

நாட்டின்வேலைத்திட்டம் மற்றும்செயல்பாட்டில்நம்பிக்கையையும் வெளிப்படைத் தன்மையையும் உருவாக்க இவை காரணங்களாக அமைகின்றன. இந்த சட்ட முன்மொழிவுகள் நிறைவேற்றப்பட்டால், நாட்டின் நிதிச் சந்தை மற்றும் முதலீடுகள் பலம் பெறும். இது இலங்கை பற்றிய மதிப்பீடு செய்யும் நிறுவனங்களின் கருத்தை மாற்றுவதற்கும் காரணமாகிறது.

செப்டெம்பர் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள முதல் மதிப்பாய்வில், நாங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டம் ஆகியவற்றை முன்வைக்க உள்ளோம். அதில் நாங்கள் ஏற்கனவே வெற்றி பெற்றுள்ளோம். வருமானத்தில் சிறிதளவு குறைவு ஏற்பட்டாலும், அதற்கான வேறு பல்வேறு மாற்று நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே எடுத்துள்ளது. அதன்படி, முழுமையான பொருளாதார செயல்முறையும் தற்போது நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுவருகிறது.

அதை நாட்டு மக்கள் உண்மையில் உணர இன்னும் சில மாதங்கள் ஆகலாம். அரசாங்கம் என்ற வகையில் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். மேலும், இந்த வேலைத்திட்டத்திற்கு எதிராக யாராவது செயல்பட்டால் அல்லது இன்று உருவாகியுள்ள அரசியல் ஸ்திரத் தன்மைமற்றும்சமூகஸ்திரத் தன்மையை இல்லாமல் செய்ய அவர்கள் செயல்பட்டால், அதன் விளைவுகள் ஒரு வருடத்திற்கு முன்பு அனுபவித்த பலவீனமான பொருளாதாரத்தை விடவும் மோசமாக இருக்கும். குறுகிய காலதுன்பங்கள்இருந்தாலும், நீண்டகாலத்திற்கு நாடு புதிய பாதையில் சென்று, மீண்டும் இது போன்ற நெருக்கடிகள் ஏற்படாத வகையில் தெளிவான எதிர்காலத்தை உருவாக்க அனைவரின் ஆதரவும் அவசியம்.

நமது நாட்டில் இரண்டு குழுக்கள் உள்ளன. ஒரு பிரிவினர், இந்தபொருளாதார நெருக்கடியால்நாட்டுமக்கள் அவதிப்பட்டு வருவதைக் கண்டு, அதனைத் தங்கள் அரசியல் இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கானவழியாக பயன்படுத்திக் கொள்கின்றனர். மற்றைய குழு, நாடு என்ற வகையில் இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு உண்மையில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கிறது.

ஒரு குழுவினர் தவறான தகவல்களின் அடிப்படையில் தவறான செய்திகளை சமூகமயப்படுத்த முயற்சிக்கின்றனர். ஆனால் ஒரு அரசாங்கமாக, சரியான தரவு மற்றும் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதற்கு எப்பொழுதும் உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்க நாங்கள்நடவடிக்கைஎடுத்துவருகின்றோம் -என்றார்.

## இந்தியக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் நாட்டிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டவையாகும். தேசியஅபாயகரஔடதங்கள் கட்டுப்பாட்டுஅதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டு இந்த மருந்து பொருட்கள் நாட்டில் பயன்படுத்தப்படுகிறது.

இதேவேளை, குறித்த மருந்துப் பொருட்களை பெற்றுக்கொண்டதன்பின்னர் நோயாளர்கள்உயிரிழந்தமை மற்றும் பல்வேறு விதமான பக்கவிளைவுகளை எதிர் கொண்டமை தொடர்பில் ஆராய்வதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருந்துப்பொருட்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டை மருந்துகளை இறக்குமதி செய்த நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை தொடர்பிலும் ஆராயப்படுகிறது - என்றார்.

## நாடாளுமன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதற் கமைய, தமது பிரதிநிதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் எழுந்துள்ள புதிய விருப்பத்திற்கு அமைய, ஏதேனுமொரு தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அவ்வாறு செயற்படவில்லையாயின், சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளமுடியாத வகையில் மக்களின் விருப்பங்கள் கொந்தளிப்பதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது.

நாடு தற்போது வழமைக்கு திரும்ப ஆரம்பித்துள்ள நிலையில், தேர்தலுக்கான தேவை காணப்படுமாயின் அதற்கான நிதியை நாடாளுமன்றத்தின் ஊடாக தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு பெற்றுக்கொடுக்கவேண்டும்.

அதேநேரம், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கு தயாராகவுள்ளது. அதற்கு தேவையான ஆரம்பக்கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதிகாரிகளை பயிற்றுவித்தல்,வாக்களிப்புநிலையங்களை தயாரித்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் தற்போது நிறைவடைந்துள்ளது. அடுத்த தேர்தலின் போது வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படுவமாயின் அதற்காக செலவு செய்யும் பணம் வீணாகும் என்றார்.

ஐ.நாவின் பரிந்துரைகளை............

# இதய நோயாளர் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்துள்ளது

### முகக்கவசம் அணிய அறிவுறுத்தல்



இதய நோயாளிகளின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக கொழும்பு தேசிய வைத்திய சாலையின் இதயநோய் தொடர்பானநிபுணர் டாக்டர் அனிது பத்திரன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகரித்துவரும் காற்று மாசுபாடு இதயநோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவழிவகுத்துள்ளது. இந்நிலைமைதொடர்பில் மக்கள் அவதானம் செலுத்த வேண்டும். வெளியில் செல்லும்போது கூடுமான வரை முகக்கவசம் அணிந்து கொள்வது சிறந்தது.

காற்று மாசுபாடு இதய நோயை மட்டுமல்ல, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல்,நீரிழிவு,புற்று நோய் மற்றும் நீண்டகால நுரையீரல்நோய்கள்போன்ற தொற்றாத நோய்களையும் ஏற்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# அம்பாறையின் இங்கினியாகலையில் கைத் துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த சந்தேகத்தில் இங்கினியாகலை ஹிந்தகளுகம பிரதேசத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைத்த தகவலின்படி, இங்கினியாகலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிந்தகளுகம, பஹல லந்த பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் அம்பாறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (05)



விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2023இல் வெளியிடப்பெற்றது.